திற்கும் மேலாக இந்தத் திட்டத்தின் மூலமாக மாநில அரசு, பயனாளிகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறபோது, ஒரு கோடி மக்களுக்கும் மேலாக வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், இது சம்பந்தமாக விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிலே இது ஒரு நல்ல யோசனை என்ற அடிப்படையில் இது சம்மந்தமாக உடனடியாக அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 19 திருமதி ரமணி நல்லதம்பி மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

19—

பனைத் தொழில் செய்யும் நாடார் வகுப்பினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

*24606—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பனைத் தொழில் செய்து மிகவும் பின்தங்கிய நிலையில் வாழுபவர்களைப் பெருவாரியாகக் கொண்ட நாடார் இனம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. து. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிந்துரையின்றி நாடார் வகுப்பினை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க இயலாது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாடார் சமுதாயத்தைச் சார்ந்த மக்களை, கிராமப்புறங்களிலே பார்ப்போமேயானால், தங்கள் உயிரைப் பணயம் வைத்து, பனை ஏறுகிற தொழிலைச் செய்து கொண்டிருந்தாலும், மிகவும் கீழ்த்தரமான, பொருளாதாரத்திலும் சமூக ரீதியிலும் மிகவும் பின்தங்கிய கீழ்த்தரமான வாழ்க்கை முறையை அவர்கள் கடைப்பிடித்துக்கொண்டிருக்கிற ஒரு நிலையிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தால் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தைக் கருத்தில்கொண்டு, அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க

வேண்டியது, காலத்தின் கட்டாயம் என்று கருதுகிற காரணத்தினால், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த 'கமிஷன்' அமைக்கப்பட்டு ஒரு வருடம் ஆகியும்கூட இன்னும் அதற்கு நீங்கள் 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' கொடுக்காத காரணத்தினால், அது பற்றி வரையறுக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. அதை எப்போது நீங்கள் செயல்படுத்த இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இதுபோன்ற பல்வேறு சமூக, பொருளாதார, கல்வியிலே பின் தங்கியுள்ள மக்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து அறிவதற்காக ஒரு நிரந்தரமான ஆணையத்தினை அதாவது பிற்படுத்தப்பட்டோர் நல நிரந்தர ஆணையத்தினை இன்றைக்கு ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த ஆணையத்திற்கு 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆணையத்திற்கு, அவர்கள் மனு கொடுப்பார்கள் எனில், அதுகுறித்து ஆணையம் அளிக்கிற பரிந்துரையின் பேரிலே, அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருவாரியான அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற இந்தப் பனை பொருள் தொழிலைச் செய்துவருகிற மக்கள், நிச்சயமாக இன்றைக்கு பல்வேறு சமுதாயத்தினரோடு அவர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகவும் பின் தங்கிய நிலையிலே வாழ்கிற காரணத்தினால், அந்தக் 'கமிஷனிலே' நீங்கள் பரிந்துரை செய்து, அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அரசுக்கு மனு கொடுப்பார்கள் எனில், அரசிடமிருந்து அந்த ஆணையத்திற்கு அந்த மனு பரிந்துரைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.